# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 20.08.2018

## இந்திய நிகழ்வுகள்

- இரயில்வேயின் **தங்க நாற்கர (Golden Quadrilateral)** திட்டத்தின் ஒரு அங்கமாக மேற்கு வங்காள மாநிலத்தில் உள்ள கரக்பூர், ஆந்திர மாநிலத்தின் விஜயவாடா இடையிலான, 1114 கி.மீ நீள பாதையில் கிழக்கு கடற்கரை சரக்கு பாதை திட்டம் வரும் 2019ம் ஆண்டிற்குள் நிறைவேற்றப்படவுள்ளது.




- அனைத்து மக்களையும் வங்கி சேவை சென்றடையும் வகையில், நாடு முழுவதும் அமைக்கப்பட்ட **இந்தியா போஸ்ட் பேமெண்ட் வங்கி** ஆகஸ்ட் 21 முதல் தனது செயல்பாட்டை தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது.
  - இதன் துவக்க விழா டெல்லியில் உள்ள **தல்கதோரா மைதானத்தில்** இந்திய பிரதமர் தலைமையில் நடைபெற உள்ளது.

- நீர்மூழ்கி கப்பலில் இருந்து அணு ஆயுதத்தை சுமந்து சென்று தாக்கும், முழுவதும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் அதிநவீன ஏவுகணையை இந்தியா, **ஹரிஹந்த்** - என்ற நீர்மூழ்கி கப்பலில் இருந்து வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.
    - இதே போல் பீரங்கி வாகன எதிர்ப்பு ஏவுகணையான ஹலினா, பொக்ரான் இராணுவ தளத்திலிருந்து வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.



- இயற்கை பேரிடர் போன்ற ஆபத்தான காலங்களில் மீட்பு பணிக்காக பயன்படும் வகையில், இந்தியாவில் முதன் முறையாக **தெலுங்கானா** மாநிலத்தில் பேரிடர் மீட்பு வாகனம் ஆகஸ்ட் 18ம் தேதி முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.




- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்புக்கு (FAO), 2019ம் ஆண்டை சர்வதேச கம்பு (திணை – சிறுதானிய) ஆண்டாக (International year of millets) அறிவிக்குமாறு இந்தியா கோரிக்கைவிடுத்துள்ளது.
- இந்தியாவில், தேசிய சிறுதானிய ஆண்டாக – 2018-ஐ அறிவித்தது குறிப்பிடத்தக்கது.
- **குறிப்பு**
    - FAO – **Food and Agriculture organization**, **1946ம்** ஆண்டு

அக்டோபர் 16ம் நாள் **கனடாவில்** துவக்கப்பட்டது.
  - இதன் தலைமையகம் **இத்தாலியில்** உள்ள **ரோம்** நகரில் அமைந்துள்ளது.




**உலக நிகழ்வுகள்**

- ஐ.நாவின் ஐக்கிய நாடுகள் சபையின் 7வது பொதுச் செயலாளராக பதவி வகித்த **கோ.ஃ.பி அன்னன்** மறைந்தார்.
  - இவர் 1997 முதல் 2006 வரை ஐ.நா சபையின் பொதுச் செயலாளராக பதவி வகித்தார்.
- குறிப்பு
  - ஆப்பிரிக்கா நாடுகளில் எச்.ஐ.வி குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியதற்காகவும், அவருடைய மனிதாபிமான சேவைகளைப் பாராட்டும் வகையில் **2001ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு கோ.ஃ.பி அன்னனுக்கு** வழங்கப்பட்டது.
  - ஐக்கிய நாடுகள் சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் கருப்பினத் தலைவர் இவரே ஆவார்.



- **மருந்து மற்றும் பயோமெடிக்கல்** ஆராய்ச்சியில் ஈடுபட்ட மூன்று அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு 2018ம் ஆண்டிற்கான அல்பானி மருந்து மைய பரிசு **(Albany Medical Centre Prize)** வழங்கப்பட்டுள்ளது.
- **பரிசு பெறும் விஞ்ஞானிகள் பின்வருமாறு**

We Shine Academy™

- ஜேம்ஸ் ஆலிசன்
- கார்ல் ஜீன்
- ஸ்டீவன் ரோசன் பர்க்



**விளையாட்டு நிகழ்வுகள்**

- இந்தோனேசியாவின் ஜகர்த்தா நகரில் நடைபெறும் ஆசிய விளையாட்டு போட்டிகளில், 65 கிலோ மல்யுத்த பிரிவில் இந்தியாவின் **பஜ்ரங் புனியா** வெற்றி பெற்று, இந்தியாவிற்கான முதல் தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.
- **குறிப்பு**
  - இந்தியாவிற்கான முதல் வெள்ளிப்பதக்கத்தை, ஆடவர் **10m Air rifle** துப்பாக்கி சுடுதல் பிரிவில் **தீபக்குமார்** வென்றுள்ளார்.



**நியமனங்கள்**

- இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான ISRO, விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் திட்டமான **ககன்யான்** திட்டத்திற்கான தலைவராக **வி.ஆர். லலிதாம்பிகா** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.